*International Journal of Linguistics and Computational Applications (IJLCA)* ISSN 2394-6385(Print)
*Volume 1, Issue 1, October - December 2014* ISSN 2394-6393(Online)

# இலக்கண உருவாக்கத்தில் தொழிற்பெயர்கள்

முனைவர் கி. சங்கர நாராயணன்

*உதவிப் பேராசிரியர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்,மெரினா வளாகம், சென்னை – 600005*

தமிழ் இலக்கணக் கூறுகளுள் ஒன்றான தொழிற்பெயரின் அமைப்பு முறைகள், வருகை முறைகள் போல்வனவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. தொல்காப்பியர் தொழிற்பெயர்க்கு விளக்கம் தரவில்லை. ஆனால் தொழிற்பெயர்ப் பற்றிப் பல இடங்களில் பேசுகிறார். எழுத்ததிகாரத்தில் புள்ளி மயங்கியலில் முதனிலைத் தொழிற்பெயர்கள் உகரச் சாரியைப் பெறும் விதத்தினையும், சொல்லதிகாரத்தில் வேற்றுமை உருபுகள் ஏற்பதனையும், விளிமரபில் தொழிற்பெயர் விளியேற்கும் விதத்தினையும் குறிப்பிடுகிறார். ஆயின் தொழிற்பெயர் யாது, அதன் இலக்கணம் யாது என்பது பற்றிக் குறிப்பிடவில்லை.

புள்ளி மயங்கியலில், ஞகரம் ஒற்றாக ஈற்றில் நிற்கும் முதனிலைத் தொழிற்பெயர்கள் (உரிஞ்போல்வன) முன்னர் அல்வழியிலும், வேற்றுமையிலும் வருமொழியாக வல்லெழுத்து முதன்மொழிகள் வந்து புணரும்போது, நிலைமொழி இறுதியில் உகரம் பெற்று வல்லெழுத்து மிக்கு முடியும் என்பதை

**“ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்**

**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**

**வல்லெழுத்தியையின் அவ்வெழுத்து மிகுமே**

**உகரம் வருதல் ஆவயினான”**

**(தொல்.எழுத்.296)**

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம். சான்று : உரிஞுக்கடிது.

முரண் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் அல்வழியில் இயல்பாகவும், வேற்றுமையில் டகரமாகவும் திரிந்து நிற்கும் என்பதனை,

**“முரண்என் தொழிற்பெயர் முதலியல் நிலையும்”**

**(தொல்.எழுத்.309)**

என்ற நூற்பாவில் குறிப்பிடுகிறார். சான்று : முரண்பெரிது, முரட்கடுமை

மகர ஈற்றுத் தொழிற்பெயரெல்லாம் ஞகர ஈற்றுத் தொழிற்பெயரின் இயல்பில் அமையும். அதாவது உகரம் பெற்று வல்லெழுத்து மிக்கு அமையும் என்பதனைத்,

**“தொழிற்பெயரெல்லாந் தொழிற்பெயர் இயல”**

**(தொல்.எழுத்.327)**

என்ற நூற்பா வழி அறியலாம். சான்று : செம்முக்கடிது.

இலம் என்ற சொல் முன்னர் ‘படு’ என்ற முதனிலைத் தொழிற்பெயர் வரும்போது, இயல்பாக அமையும் என்பதனை,

**“இலம் என் கிளவிக்குப் படுவரு காலை**

**நிலையிலும் உரித்தே செய்யுளான”**

**(தொல்.எழுத்.316)**

என்ற இந்நூற்பாவின் மூலம் விளக்குகிறார். சான்று : இலம்படு - இலம்படு

இவ்வாறாக ஞ, ண. ந, ம, ல, ள, வ, ன போன்ற முதனிலைத் தொழிற்பெயர் ஈறுகள் உகரச் சாரியைப் பெற்று வல்லெழுத்து மிக்கு வரும் என்பதனையும், ஈம், கம், உரும், மின், பின், பன், கன், வல், புள், வள், இலம் என்ற சொற்களும் முதனிலைத் தொழிற்பெயர் ஈறுகள் போல வல்லெழுத்து வரும் போது உகரம் பெற்று வல்லினம் மிக்கு வரும் என்பதனைப் புள்ளிமயங்கியலில் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். சொல்லதிகாரத்தில் வேற்றுமை மயங்கியலில், தடுமாறு தொழிற்பெயர்க்கு 2ஆம், 3ஆம் வேற்றுமை உருபு வரும் என்பதனைக் குறிப்பிடுகிறார்.

**“தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்**

**கடிநிலை இலவே பொருள் வயினான”**

**(தொல்.சொல்.95)**

‘ஆன்’ இறுதி தொழிற்பெயர் விளியேற்கும் போது ‘ஆயாக’ மாறும் என்பதனைத்,

**“தொழிலிற் கூறும் ஆனென்னிறுதி**

**ஆயாகும் மே விளிவயினான’**

**(தொல்.சொல்.134)**

என்ற நூற்பாக்களில் வெளிப்படுத்துகிறார். சான்று : ஆண்டான் - ஆண்டாய்

ரகர மெய்யீற்றுத் தொழிற்பெயர் விளியேற்கும் போது ஏகாரம் பெறும் என்பதனைத்,

**“தொழிற் பெயராயின் ஏகாரம் வருதலும்**

**வழுக்கின்று என்மனார் வயங்கியோரே”**

**(தொல்.சொல்.624)**

என்ற நூற்பாவில் விளக்குகிறார். தொல்காப்பியம் போன்றே அதற்குப் பின்னர் வந்த இலக்கண நூற்களான வீரசோழியம், நேமிநாதம் போன்றனவும் தொழிற்பெயர்களின் இலக்கணத்தை உருவாக்கவில்லை. தொழிற்பெயருக்கான விளக்கத்தை முதன் முதலில் நன்னூலே சுட்டுகின்றது.

**“வினையின் பெயரே படர்க்கை” (நன்.286)**

எனச் சுட்டித் தொழிற்பெயர் படர்க்கை இடத்திற்கே உரியது என்பதனை உணர்த்துகிறது. எ.கா:- உணல்நன்று,

தினல்நன்று, வருகைநன்று. தொழிற்பெயர்க்கு வினைப்பெயர் என்ற புதிய குறியிட்டினை நன்னூலார் கொடுத்திருப்பதும் சுட்டத்தக்கது. இலக்கண விளக்கமும் நன்னூலினை ஒத்தே தொழிற்பெயருக்கு விளக்கம் அளிக்கிறது (நூ.188).

முத்துவீரியம் தொழிற்பெயருக்கான இலக்கணத்தைச் சுட்டவில்லை. ஆனால் தொழிற்பெயர் எவ்வாறு விளிஏற்கும் என்பதனைத் தொல்காப்பியத்தைத் தழுவி,

**“தொழிற்பெயர்க் கிளவி யேயோடு சிவணும்”** **(மு.வி.575)**

எனத் தொழிற்பெயர்கள் ஈற்றோடு ஏகாரம் வந்து விளிஏற்கும் என்ற கருத்தினைச் சுட்டுகின்றது. சான்று: வந்தார் - வந்தீரே. இலக்கணக் கொத்து முதனிலை இல்லாமலும் தொழிற்பெயர் வரும் என்ற விளக்கத்தைத் தருகின்றது.

**“முதனிலை யின்றியுத் தொழிற்பெயர் மொழிகுவர்”**
**(இ.கொ.142)**

சான்று: கூத்து, சண்டை, வேட்டை, பூசல் போன்றவை. கூத்து என்பது கூத்தாடு என்ற வினையில் இருந்து உண்டானது. இது முதனிலை இல்லாமல் தொழிற்பெயராக வந்தது என்பர். சுவாமிநாதம், இலக்கணக் கொத்து நூற்பாவினைத் தழுவி, இந்நூல் தொழிற்பெயர்க்கு விளக்கம் தருகிறது.

**“முதனிலையின்றியுந் தொழிற்பெயர் உளவாம்**

**ஈறிலாத் தொழிற்பெயர் எச்சமு(ம்) முற்றுமாகும்”** **(சு.நா.51)**

இலக்கணக் கொத்து கூறிய விளக்கத்துடன் தொழிற்பெயர் பெயரெச்சமாகவும், முற்றாகவும் பயன்படும் என்ற புதிய கருத்தினை எடுத்துரைக்கிறது இந்நூல். சான்று:

1. பொருள் செயல் வகை என்ற தொடரில் பொருள் செய்யும் வகை என்பதால் தொழிற்பெயர் பெயரெச்சமாக வந்துள்ளது.

‘மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல்’
(தொல்.104)

என்ற தொடரில் ‘நிலையல்’ என்ற தொழிற்பெயர் வினைமுற்றாக வந்துள்ளது. தமிழ்நூல் வினைமுற்றினைப் போல் ஐந்தொகை காட்டுவது ஒன்றும் இல்லாமல், எச்சவினைபோல் வினை முதனிலையோடு பொருளெஞ்சி நிற்றல் இன்றி, தொழில் தன்மையை ஆளொடு சார்த்தாது சுட்டுவது தொழிற்பெயர் எனக் குறிப்பிடுகிறது.

**“முற்று வினைபோல் ஐந்தொகை யின்றி**

**எச்ச வினைபோல் எச்சப் படாமல்**

**தொழிலை மட்டும் சுட்டும் தொழிற்பெயர்.”**
**(த.நூ.62)**

தமிழ்க்காப்பு இயம் எவ்வகைப்பட்ட பொருள்களாயினும் அவற்றின் வினையை உணர்த்தும் பெயரே தொழிற்பெயர் என விளக்கம் தருகிறது.

**“எவ்வகைப்பட்ட பொருள்களின் வினையை**

**உணர்த்தும் பெயரே தொழிற்பெயர் ஆகும்”**
**(த.கா.இ.62)**

சான்று: படித்தல், கற்றல். எனவே, தமிழ் இலக்கணிகளின் படித் தொழிற்பெயர் என்பன,

1. வினையை உணர்த்தும் பெயர்களாக வருவன.
2. படர்க்கை இடத்தே வரும்.
3. முதனிலை இல்லாமலும் வரும்.
4. பெயரெச்சமாகவும், வினைமுற்றாகவும் வருவன

எனக்கொள்ளலாம். மேலும்,

**“பெயர் நிலைக் கிளவி காலந் தோன்றா**

**தொழில் நிலை ஒட்டும் ஒன்றலங்கடையே”**
**(தொல்.சொல்.71)**

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை எழுதும் இளம்பூரணர்,

“பெயர்ச் சொல் காலந்தோன்றா; தொழிற்பெயராயின் காலம் தோன்றும்”, “அற்றன்று, பெயர்ச்சொல் காலந்தோன்றா எனவே, தொழிற்பெயர் காலந் தோன்றுதலும், தோன்றாமையும் உடைய என்பதாம்” என்ற கருத்துக்களை முன் வைக்கிறார். எனவே, இளம்பூரணர் உரைப்படி, தொழிற்பெயரில்

1. காலம் தோன்றும் தொழிற்பெயரும் (வினையாலணையும் பெயர்)
2. காலம் தோன்றா தொழிற்பெயர்

என இருவகைகளில் அமைதலைக் காணலாம். இதுபோலவே சேனாவரையரும் இனம்பூரணரைப் போன்று இந்நூற்பா உரையில் தொழிற்பெயரில் காலந்தோன்றும் தொழிற்பெயர் (வினையாலணையும் பெயர்), காலந்தோன்றா தொழிற்பெயர் என இருவகையில் அமைவதைக் குறிப்பிடுவார். நச்சினார்க்கினியரும் நூற்பா உரையில்,

“பெயர்க்கிளவி— பெயர்ப்பெயராகிய சொல்லும்,
நிலைக்கிளவி— அப்பெயரது நிலையிலே நிற்றலை உடையச் சொல்லும்,
காலம் தோன்றா— காலம் தோன்றாவாய் நிற்கும்,

தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங்கடையே - ஒரு பொருளது புடைப்பெயர்ச்சியாய்க் காலந்தோன்றுதற்குப் பொருந்தும் ஒரு கூற்றுத் தொழிற்பெயர் அல்லா இடத்து” என்கிறார். மேலும் இளம்பூரணரும், சேனாவரையரும் பெயரில் இரண்டு வகை இருப்பதனைக் கூற, நச்சினார்க்கினியர், தொழிற்பெயரில் இரண்டு வகை இருப்பதனையும் விளக்குகிறார்.

இதனைப், “புடைப்பெயர்ச்சி மாத்திரம் உணர்த்தி நிற்கும் உண்டல், தின்றல் என வரும் வினைப்பெயரும், பூசல், வேட்டை என்றாற் போலப் புடைப்பெயர்ச்சியை விளக்காது நிற்கும் வினைப்பெயரும் என்று குறிப்பிடும் கூற்றின் மூலமாகத் தொழிற்பெயரில்,

1. வினைத் தொழிற்பெயர்
2. பொருள் தொழிற்பெயர்

என இரண்டு வகைகள் இருப்பதனை அறிய முடிகிறது. இவருக்கு அடுத்து வந்த கல்லாடர் நச்சினார்க்கினியர் கருத்தினை ஒட்டியே உரை எழுதி உள்ளாமையைக் காணமுடிகிறது. “பெயர்தாம் பெயர்ப்பெயரும், தொழிற்பெயரும் என இருவகைப்படும். பெயர்ப்பெயராவன சாத்தன், கொற்றன் என ஒரு தொழிலால் பெயர் அன்றி அவ்வப் பொருட்டு இடுகுறியாய் வருவன. இவை காலந்தோன்றா” என உரைச்சுட்டுவார்.

தொழிற்பெயராயின் தோன்றும் தொழிற்பெயர் தாமும் தொழிலின் மேல் நின்ற தொழிற்பெயரும், பொருள்மேல்

நின்ற தொழிற்பெயரும் என இருவகைப்படும். அவற்றுள் தொழிலின் மேல் நின்றனவும் காலந்தோன்றா. அவை உணல், தினல் எனப் பொருளது புடைப்பெயர்ச்சியை அறிவித்து நிற்கும் என்பது. இவற்றைப் பூசை, வேட்டை என்றாற் போல்வன வினைச்சொற்கு அடியாய்ப் புடைப்பெயர்ச்சியை விளக்காது பெயர்ப்பெயரே போல் நிற்பனவும் உள என்பது" என உரை தருவார்.

தெய்வச்சிலையாரும் பெயர் நிலைமையுடைய சொல், காலம் தோன்றா. தொழில் நிலையோடு ஒட்டி நிற்கும் பெயரும் ஒரு வகையல்லன காலம் தோன்றா எனக் கூறி தொழிற்பெயரில் இரு வகைகள் உள்ளமையைத் தெளிவுறுத்துவர். எனவே, தொல்காப்பிய உரைகாரர்களின் வழித் தொழிற்பெயர்கள்,

1. **காலம் உணர்த்திய தொழிற்பெயர்கள்**
2. **காலம் உணர்த்தாத தொழிற்பெயர்கள்**

என இரு வகைகள் உள்ளமையை உணரலாம். மு.வரதராசனார், "தொழில் நிகழ்தலை உணர்த்தாது, தொழிலையே இன்னதென்று உணர்த்துவது தொழிற்பெயர்" என விளக்கம் தருகிறார் (மொழிநூல், 1947, ப.223). ஆ.வேலுப்பிள்ளை வினைப்பகுதிகளோடு விகுதியை சேர்க்கும் போது தொழிற்பெயர் வடிவம் தோன்றும்" எனக் குறிப்பிடுவார் (தமிழ் வரலாற்றிலக்கணம், 1966, ப.30). ச.சுபாஷ் சந்திரபோஸ், பெயர்களை வினையடிகளோடு விகுதி சேர்ந்தோ, சேராமலோ பெறப்படும் பெயர்களுக்குத் தொழிற்பெயர் அல்லது வினைப்பெயர் எனப்படும்[3] என விளக்கம் தருகிறார் (சொல்லியல் ஆய்வுகள், 2001, ப.63). அறிஞர் மோ. இசரயேல், தொழிற்பெயர்கள் வினையின் தன்மையில் சிலவற்றைப் பெற்றும், பயன் வகையில் பெரும்பான்மையில் பெயரையே ஒத்து செயல் புரிகின்றது என விளக்கம் அளிப்பார் (இலக்கண ஆய்வு பெயர்சொல், 1976, ப.72).

ஒரு வினையிலிருந்து வந்த பெயரே தொழிற்பெயராம் என விளக்கம் தருவார் சுத்தானந்த பாரதியார் (இனிய தமிழ் இலக்கணம், 1965, ப.42). சொ. பரமசிவம் 'ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர், எண், இடம், காலம், பால் ஆகியன தோன்றாது பொதுவாக வருவன எனக் குறிப்பிடுவார் (நற்றமிழ் இலக்கணம், 2000, ப.238).

சௌ.மதார் மைதீன் 'ஒரு செயலுக்குப் பெயராகச் சுட்டப்பெறுபவை; அல், தல், கை போன்ற விகுதியைப் பெற்று வரும் படர்க்கை இடத்திற்கு மட்டுமே உரியது. காலம் காட்டாது (பயன்முறைத் தமிழ், 2000, ப. 123) எனக் குறிப்பிடுவார். எனவே, தொழிற்பெயர்கள் என்பன,

1. தொழிலை உணர்த்தும் பெயர்களாக வருவன.
2. படர்களாக இடத்திற்கே உரியன.
3. காலம் காட்டும் காட்டாதன என இரு வகைகளில் அமைவன.
4. தல், அல், கை விகுதிகளை ஏற்பன

எனக் கருதுவர் மொழியியலாளர்கள். மேலும் தொழிற்பெயர்கள், வினையால் அணையும் பெயர்களிலிருந்து வேறுபட்டு வரும். இவற்றிற்கிடையேயான வேறுபாடுகள் கீழ்க்கண்டவாறு அமைகின்றன.

| எண் | தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| 1. | தொழிலுக்கே பெயராய் வரும் | தொழிலுடைய கருத்தாவுக்குப் பெயராய் வரும் |
| 2. | வேற்றுமை உருபினை ஏற்காது | வேற்றுமை உருபினை ஏற்று வரும் |
| 3. | படர்க்கையில் மட்டும் வரும் | மூவிடத்திலும் வரும் |
| 4. | பெரும்பாலும் காலம் | காலம் காட்டும . காட்டுவதில்லை |
| 5. | மை,து, விகுதி பெற்ற பெயரே | எல்லாப்பெயரும் காலம் காட்டும் காலம் காட்டும் |
| 6. | வினையின் அடியாகப் பிறப்பன | வினையின் அடியாகப் பிறப்பன |
| 7. | அல், தல் விகுதிகளைப் பெற்று | தனித்த விகுதிகள் கிடையாது வரும். |

எனவே இலக்கணிகள், உரைகாரர்கள், மொழியியலாளர்கள் போன்றோரின் கருத்துக்களின் வழித் தொழிற்பெயர்கள் என்பன.

1. தொழிலை உணர்த்துவன
2. படர்க்கை இடத்திற்கு உரியன
3. காலம் காட்டும், காலம் காட்டாதன என இருவகைகளில் அமைவன.
4. வினையின் அடியாகப் புறப்பன.
5. வேற்றுமை உருகினை ஏற்காதன
6. அல், தல் விகுதிகளைப் பெற்று வருவன
7. தொழிலுக்கே பெயராய் வருவன

தொல்காப்பியம் தொழிற்பெயா்கள் குறித்து இலக்கணம் சுட்டாத போதும், தொழிற்பெயா்களின் வருகை முறைகள் குறித்து எழுத்ததிகாரத்திலும், சொல்லதிகாரத்திலும் பதிவு செய்கிறார். இதனை அடித்தளமாகக் கொண்டு பின்னால் வந்த இலக்கண நூற்கள் தொழிற்பெயருக்கான இலக்கணத்தை அமைத்து அதன் அமைப்பு முறைகள், வருகை முறைகள் போன்றவற்றில் மாற்றத்தினையும் வளா்ச்சியினையும் முன்வைத்தன. இலக்கணக்காரா்கள், உரையாசிரியா்கள், மொழியியலாளா்கள் கூற்றுப்படி தொழிற்பெயா் என்பது வினையடியாகப் பிறந்து, தொழிலை உணா்த்தி, படா்க்கை இடத்துக்கு உரியதாக வருவது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

## துணைநூற் பட்டியல்

[1] இசரயேல்.மோ., இலக்கணஆய்வு - பெயர்ச்சொல், சிந்தாமணி வெளியீடு,மதுரை, 1976.
[2] இசரயேல்.மோ., இலக்கணஆய்வு - வினைச்சொல், சிந்தாமணி வெளியீடு, மதுரை, 1976.
[3] இளம்பூரணர்., தொல்காப்பிய உரை - எழுத்ததிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1964.
[4] இளம்பூரணர்., தொல்காப்பிய உரை - சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1963.
[5] இளவரசு.சோம., நன்னூல் - எழுத்ததிகாரம், சுடர் பதிப்பகம், சிதம்பரம், 1987.

[6] இளவரசு.சோம., நன்னூல் - சொல்லதிகார உரை, சுடர் பதிப்பகம், சிதம்பரம், 1987.
[7] கல்லாடனார்., தொல்காப்பிய உரை சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1964.
[8] கோவிந்தசாமிபிள்ளை., சுவாமிநாதம், தமிழ் சங்க வெளியீடு, சென்னை, 1924.
[9] காசுமான். மீ., தமிழ்க்காப்புஇயம், காசுமான் பதிப்பகம், மார்த்தாண்டம், 2005.
[10] சண்முகம்.செ.வை., சொல்லிலக்கணக் கோட்பாடு (2) அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், சென்னை, 1986.
[11] சுத்தானந்த பாரதியார்., இனிய தமிழ் இலக்கணம், கவிதா பதிப்பகம், சென்னை.
[12] சுபாஷ்சந்திரபோஸ்.ச., சொல்லியல் ஆய்வுகள், மெய்யப்பன் தமிழாய்வகம், சென்னை, 2000.
[13] சுவாமிநாத தேசிகர்., இலக்கணக்கொத்து, கலாரத் நாகரம் பதிப்பகம், தஞ்சாவூர், 1990.
[14] சேனாவரையர, தொல்காப்பிய உரை - சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1994.
[15] தமிழண்ணல், தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், கழக வெளியீடு,சென்னை, 1964.
[16] தமிழன். த.ச., தமிழ்நூல், தமிழன் பதிப்பகம், திருவாரூர், 1972.
[17] தெய்வச்சிலையார், தொல்காப்பிய உரை-சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1963.
[18] நச்சினார்க்கினியர்., தொல்காப்பிய உரை-சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1962.
[19] பரமசிவம்.சொ., நற்றமிழ் இலக்கணம், பட்டுப்பதிப்பகம்,சென்னை, 2000.
[20] முத்துவீரஉபாத்தியாயர்., முத்துவீரியம், கழக வெளியீடு, சென்னை, 1972.
[21] வரதராசன்.மு, மொழிநூல், கழக வெளியீடு, சென்னை, 1958.
[22] வேலுப்பிள்ளை.ஆ., தமிழ் வரலாற்றிலக்கணம், பாரிபுத்தகப்பண்ணை, சென்னை, 1979.
[23] வைத்தியநாத தேசிகர், இலக்கணவிளக்கம் - எழுத்து, சொல்லதிகாரம், கழக வெளியீடு, மதுரை, 1973.